# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII of Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE ADDITIONAL CHIEF METROPOLITAN MAGISTRATE, EGMORE, CHENNAI-600 008.

**C.C.No. 15526/2022** **Date: 04.08.2026**

Deposition of Witness for Prosecution Witness No.04

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. A.Raphael |
| Father's Name | : | Thiru. Jacobh |
| Age | : | 62 Yrs. |
| Address | : | No.192, Kakanji Street, Kakanji Nagar, Chennai-39 |

(Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873.)

**<u>முதல் விசாரணை:</u>**

நாங்கள் ஏவிளம் அப்பளம் என்ற அப்பளக்கடையை கக்கன்ஜி தெருவில் இரண்டு தலைமுறையாக நடத்தி வந்தோம். தற்சமயம் தொழில் நலிவடைந்ததால் ஆட்டோ ஓட்டி வருகிறேன். திரு.தேவராஜ் என்னுடைய வீட்டிற்கு எதிர் வீட்டில் வசித்து வந்தார். நாங்கள் சுமார் 20 வருடங்களாக எதிர் எதிர் வீட்டில் வசித்து வந்தோம். ஆகையால் அவருக்கும் எனக்கும் நல்ல நட்பு உண்டு. கடந்த 2018ம் ஆண்டு திரு.தேவராஜ் அவர்கள் என்னிடம் அவசர தேவைக்காக ரூ.3 லட்சம் கடனாக கேட்டார். நானும் அதை அவருக்கு கொடுத்தேன். 2021ம் வருடம் அவர் அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார். அவர் கடன் வாங்கும் போது எந்த தேவைக்காக வாங்கினார் என எனக்கு தெரியாது. கடன் கொடுத்ததற்கு பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை. ஏனென்றால் அவரிடமிருந்து நானும் பலமுறை

கடன் வாங்கி, திருப்பி கொடுத்துள்ளேன். இது சம்பந்தமாக சிபிஐ ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

தேவராஜ் எனக்கு வட்டிக்கு பணம் கொடுப்பாரா என்றால் வட்டி இல்லை. கைமாற்றாக தான் கொடுப்பார். தேவராஜ் ரியல் எஸ்டேட் தொழில் செய்தது எனக்கு தெரியுமா என்றால் அவர் இடம் வாங்கி, விற்பார். அவர் புரோக்கராக இருந்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. தேவராஜ் பழைய இருசக்கர வாகனங்களை வாங்கி, விற்று வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் தேவராஜிற்கு வங்கி மூலம் பணம் கொடுத்தேனா என்றால் cash ஆக தான் கொடுத்தேன். அதற்காக ஆவணம் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. சாதரணமாக வீட்டில் எவ்வளவு ரொக்கம் வைத்திருப்பேன் என்றால் தொழிலுக்காக ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை வைத்திருப்பேன். தேவராஜ் பணம் கேட்டதால் rotation காக வைத்திருந்த தொகையை கொடுத்தேன். அப்பள தொழிலை குடிசை தொழிலாக செய்தேனா அல்லது பெரிய அளவில் செய்தேனா என்றால் குடிகை தொழிலாக செய்தேன். அப்பள தொழில் செய்த காலத்தில் தோராயமாக மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்றால் சீசனை பொருத்து ரூ.45,000/– முதல் ரூ.50,000/– வரை வரும். குறைந்தபட்சம் ரூ.25,000/– வரை வரும்.

Typed to my dictation in Open
Court, read over to the deponent
and admitted to be correct.

Sd/- M.Sivasakthi
ADDITIONAL CHIEF METROPOLITAN MAGISTRATE,
EGMORE, CHENNAI-08.

//True Copy//